செ.வெ.எண்: 50 நாள்: 21.11.2016

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் நன்னீர் மீன்வளர்ப்பு / உவர்நீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்ட திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

- தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்கள் நன்னீர் மீன்வளர்ப்பு / உவர் நீர் இறால் வளர்ப்புக் குளங்களில் சூரிய ஒளி மின்சக்தி மூலம் இயங்கும் மோட்டார் / காற்றுப்புகுத்தி மற்றும் விளக்குகள் ஆகியவற்றை அமைப்பதற்காக ஆகும் செலினத் தொகை ரூ.15.00 லட்சத்தில் 50 விழுக்காடு ரூ.7.50 லட்சம் மானியத் தொகையாக வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து அதிகம் பெறப்படின், முன்னுரிமை மற்றும் தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். விருப்பமுள்ளவர்கள் மற்றும் விவசாயிகள் இந்த விளம்பரம் வெளிவந்த 30 நாட்களுக்குள் விண்ணபிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், விவரங்களுக்கு எண்.11, லெட்சுமிபுரம் முதல் தெருவில் செயல்படும் மாவட்ட மீன்வள உதவி இயக்குநர் அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொண்டு உரிய விவரம் பெற்று பயனடையமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., கேட்டுக் கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**